
**டிசம்பர் – 01**

# TNPSC துளிகள்

- ❖ சர்வதேச கூட்டுறவுக் கூட்டணியின் முதல் உலகளாவிய மாநாடு ஆனது புது டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ "Beyond the Higgs Boson: The W Boson and Dr. Ashutosh Kotwal's Quest for the Unknown" எனப்படும் புத்தகம், மானிக் கோட்வால் என்பவரால் எழுதப் பட்டு, ஜெர்ரி பின்டோ என்பவரால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் புகழ்பெற்ற நரசாபுரம் சரிகை கைவினைப்பொருள் ஆனது, மதிப்பு மிக்க புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- ❖ தொழிலதிபரும் எஸ்ஸார் குழுமத்தின் தலைவருமான சஷிகாந்த் ரூயா காலமானார்.
- ❖ அசோகா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ப்ரோஜித் பிஹாரி முகர்ஜி, "Brown Skins, White Coats: Race Science in India, 1920–66" என்ற அவரது புத்தகத்திற்காக 2024 ஆம் ஆண்டு ஃபைசர் விருதினைப் பெற்றுள்ளார்.
- ❖ இந்தியா தனது முதல் பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் நிரப்பு நிலையத்தினை லடாக்கின் லே எனுமிடத்தில் திறந்து வைத்துள்ளது.
- ❖ ஹிண்டால்கோ நிறுவனமானது, டவ் ஜோன்ஸ் நிலைத் தன்மைக் குறியீட்டில் (DJSI) உலகின் மிகவும் நிலையான அலுமினிய உற்பத்தி நிறுவனமாகத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக (2020-2024) இடம் பெற்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் குறைவான டெங்கு பாதிப்பு





- ❖ தற்போது காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்று வரும் 75% பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படுத்தும் வைரசின் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ இதனால் டெங்கு பாதிப்பு கட்டுக்குள் உள்ளது என்பதோடு மேலும், டெங்குவை பரப்பும் ஏடிஸ் கொசுக்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.
- ❖ 2017 ஆம் ஆண்டில் சென்னையின் தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் நடத்திய

ஆய்வில், டெங்கு IgG 77% அதிகமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

- தற்போது, பெண் ஏடிஸ் கொசுக்கள் 3.76% மட்டுமே DENV பாதிப்பினை ஏற்படுத்தச் செய்வதற்கு நேர்மறையான விளைவைக் கொண்டிருந்தது.

## தமிழ்நாட்டில் குழிநரிப் பூச்சிகள்





- அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சென்னையில் பால்பரேஸ் கான்ட்ராரியஸ் எனப்படும் ஒரு பெரிய அளவிலான வளர்ச்சியடைந்த குழிநரி பூச்சியினைக் கண்டறிந்துள்ளனர்.
- இது ஒரு தும்பி வகை பூச்சியினைப் போல் இருந்தாலும், அது ஒரு உணர் கொம்புகள் மற்றும் ஒரு தனித்துவமானச் சிறகடிக்கும் வகையிலான சிறகுகளையும் கொண்டு உள்ளதால் இந்த அம்சங்கள் இதனைத் தும்பி போன்ற ஒரு வகையிலிருந்து நன்கு வேறுபடுத்திக் காட்டுகிறது.
- குழிநரிப் பூச்சிகள் என்பவை பெரும்பாலும் ஆப்பிரிக்கா, மியான்மர், தாய்லாந்து மற்றும் இலங்கையில் காணப் படுகின்றன மற்றும் ஒடிசா, மகாராஷ்டிரா, கர்நாடகா, மிசோரம், உத்தரகாண்ட் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றன.
- சென்னை மாநகராட்சியின் பகுதியில் பல்பரேஸ் கான்ட்ராரியஸ் தென்பட்டுள்ளது தமிழகத்தில் ஒரு புதிய பதிவாகும்.

## தமிழ்நாட்டில் கடல் மட்ட உயர்வு பாதிப்பு

- கடல் மட்டம் உயர்வதால் தமிழ்நாட்டின் பிச்சாவரம் மற்றும் முத்துப்பேட்டை ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் பரப்பிலான சதுப்பு நிலங்கள் இழக்க நேரிடும் என்று சமீபத்திய ஆய்வு எச்சரிக்கிறது.
- கடல் மட்ட உயர்வு காரணமாக முத்துப்பேட்டை மண்டலத்தில் 2,382 ஹெக்டேர் வரையிலான சதுப்புநிலக் காடுகளும், பிச்சாவரத்தில் 413 ஹெக்டேர்களும் 2100 ஆம் ஆண்டிற்குள் நீரில் மூழ்கக் கூடும்.

- இந்தக் கடலோரக் காடுகளின் பெரும் இழப்பின் காரணமாக, முத்துப்பேட்டை மற்றும் பிச்சாவரம் பகுதிகளில் இருந்து 2.24 Tg (டெராகிராம்) கார்பன் வெளியிடப்பட்டு, பருவ நிலை மாற்றத்திற்குப் பங்களிக்கும் என்று ஆய்வு மதிப்பிடுகிறது.




## LPG தொகுப்புகளின் சோதனைத் திட்டம் – தமிழ்நாடு




- மண்ணெண்ணெய்யைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்ற, படகு வெளிப்புற உந்து விசை இயக்கிகள் (OBM) கொண்ட மீன்பிடி படகுகள் விரைவில் சுற்றுச்சூழலுக்கு நன்கு உகந்ததாக மாற உள்ளது.
- அவை மண்ணெண்ணெயால் இயங்கும் எஞ்சின்களுக்குப் பதிலாக திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவால் இயங்கும் வெளிப்புற உந்துவிசை இயக்கிகளால் இயங்கும் எஞ்சின்களைப் பெற உள்ளன.
- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இதுபோன்ற 150 படகுகளுக்கு LPG தொகுப்புகள் வழங்கப்படும்.
- மாசுபடுத்தும் மண்ணெண்ணெய்க்கு ஒரு நல்மாற்றாக இந்த எரிபொருளை அறிமுகப் படுத்துவதற்கு இது போன்ற ஒரு சோதனைத் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

- மண்ணெண்ணெய் எந்திரங்களில் கார்பன் மோனாக்சைடு உமிழ்வு ஆனது 1.2% ஆக இருந்தது, அதே சமயம் LPG வாயுவினால் 0.32% மட்டுமே வெளியிடப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## அடிப்படை கால்நடை வளர்ப்புப் புள்ளிவிவரங்கள் 2024

| Items | 2022-23 | 2023-24 | Y-0-Y |
|---|---|---|---|
| Milk Production (million tonnes) | 230.58 | 239.30 | 3.78% |
| Meat Production (million tonnes) | 9.77 | 10.25 | 4.95% |
| Egg Production (billion nos) | 138.38 | 142.77 | 3.17% |
| Wool Production (million kg) | 33.61 | 33.69 | 0.22% |
| Per Capita Milk Gm/Per day | 459 | 471 | 2.61% |
| Per Capita Egg (numbers per annum) | 101 | 103 | 0.98% |

- இது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில் இருந்த காலக் கட்டத்தில் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த மாதிரி ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது.
- 2023-24 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் மொத்தப் பால் உற்பத்தியானது சுமார் 239.30 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- கடந்த 10 ஆண்டுகளில் இதில் 5.62% வளர்ச்சி பதிவாகியுள்ளது என்பதோடு இது 2014-15 ஆம் ஆண்டில் 146.3 மில்லியன் டன்னாக இருந்தது.
- மேலும், 2023-24 ஆம் ஆண்டில் பதிவான பால் உற்பத்தி ஆனது 2022-23 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை விட 3.78% அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள ஐந்து மாநிலங்கள் - மொத்தப் பால் உற்பத்தியில் 16.21% பங்குடன் உத்தரப் பிரதேசம் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் (14.51%), மத்தியப் பிரதேசம் (8.91%), குஜராத் (7.65%), மற்றும் மகாராஷ்டிரா (6.71%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியானது, 142.77 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் பதிவான 78.48 பில்லியன் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் கடந்த 10 ஆண்டுகளில் 6.8% வளர்ச்சி பதிவாகியுள்ளது.
- மேலும், 2022-23 ஆம் ஆண்டை விட 2023-24 ஆம் ஆண்டில் ஆண்டுதோறும் சுமார் 3.18% உற்பத்தி அதிகரித்துள்ளது.

- ❖ மொத்த முட்டை உற்பத்தியில் சுமார் 17.85% பங்குடன் ஆந்திரப் பிரதேசம் முதல் இடத்தில் உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (15.64%), தெலுங்கானா (12.88%), மேற்கு வங்காளம் (11.37%) மற்றும் கர்நாடகா (6.63%) ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- ❖ 2023-24 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த இறைச்சி உற்பத்தியானது, 10.25 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ 2014-15 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 6.69 மில்லியன் டன்கள் என்ற அளவினை விட கடந்த 10 ஆண்டுகளில் இறைச்சி உற்பத்தியில் 4.85% வளர்ச்சி பதிவாகியுள்ளது.
- ❖ மேலும், 2022-23 ஆம் ஆண்டை விட 2023-24 ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி சுமார் 4.95% அதிகரித்துள்ளது.
- ❖ இறைச்சி உற்பத்தியில் முக்கிய பங்களிப்பாளராக மேற்கு வங்காளம் 12.62% பங்குடன் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (12.29%), மகாராஷ்டிரா (11.28 %), தெலுங்கானா (10.85%) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (10.41%) ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- ❖ 2023-24 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தக் கம்பளி உற்பத்தியானது, 33.69 மில்லியன் கிலோவாக மதிப்பிடப் பட்டுள்ளது என்பதோடு இதில் கடந்த ஆண்டை விட சுமார் 0.22% என்ற அளவிற்கு சிறிதளவு வளர்ச்சி மட்டுமே பதிவாகியுள்ளது.
- ❖ இது 2019-20 ஆம் ஆண்டில் 36.76 மில்லியன் கிலோவாகவும், முந்தைய ஆண்டில் 33.61 மில்லியன் கிலோவாகவும் இருந்தது.
- ❖ 47.53% பங்குகளுடன் இராஜஸ்தான் முதலிடத்தில் உள்ளது, அதனைத் தொடர்ந்து ஜம்மு & காஷ்மீர் (23.06%), குஜராத் (6.18%), மகாராஷ்டிரா (4.75%) மற்றும் இமாச்சலப் பிரதேசம் (4.22%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ❖ உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ள அதே சமயம் முட்டை உற்பத்தியில் 2வது இடத்தில் உள்ளது.

## Teacher செயலி




- ❖ கல்வியின் தரத்தை உயர்த்தும் ஒரு நடவடிக்கையாக, மத்திய அரசானது Teacher என்ற செயலியினைப் புது டெல்லியில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்த எண்ணிமத் தளமானது, தொடர்ச்சியான தொழில்முறை வளர்ச்சியை நன்கு


ஊக்குவிப்பதற்காக 21 ஆம் நூற்றாண்டின் வகுப்பறைகள் பற்றிய சில தேவையானத் திறன்களை ஆசிரியர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது படிப்புத் திட்டங்கள், ஒளிப்படக் காட்சிகள், எண்ணிம ஒலி வடிவ ஒலிபரப்புகள், இணையம் சார்ந்த கருத்தரங்கங்கள், வினாடி வினாக்கள் மற்றும் பலவற்றை நன்கு உள்ளடக்கிய 260 மணிநேர உயர்தர உள்ளடக்கத்தை வழங்குகிறது.
- இது கற்பித்தல் நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் மாணவர் ஈடுபாட்டை நன்கு அதிகரித்தல் ஆகியவற்றை ஒரு நோக்கமாகக் கொண்டது.

# சர்வதேசச் செய்திகள்

## கெலேபு - விழிப்புணர்வு மிக்க நகரம்

- பூடான் நாட்டின் கெலேபு என்ற நகரில் உருவாக்கப்பட்டு வரும் 2,500 சதுர கிலோமீட்டர் பரப்பிலான "சுழிய அளவு கார்பன் உமிழ்வு" வெளியிடும் ஒரு நகரத்திற்கு இந்தியா ஆதரவளித்து வருகிறது.
- இது ஒரு சிறப்பு நிர்வாகப் பகுதி (SAR) ஆகும்.
- இது அதன் சொந்த அரசாங்கத்தைக் கொண்டிருக்கும் என்பதோடு மேலும், அதன் சொந்தச் சட்டத்தை உருவாக்கச் செய்வதற்கான சுதந்திரம் மற்றும் சுதந்திரமான நீதித்துறை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- இது ஒரு தேசியப் பூங்கா மற்றும் ஒரு வனவிலங்குச் சரணாலயம் என இரண்டு பாதுகாக்கப் பட்ட பகுதிகளைக் கொண்டிருக்கும்.
- 'விழிப்புணர்வு மிக்க நகரம்' என்ற இந்தத் திட்டம் ஆனது பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சக் அவர்களால் கருத்தாக்கம் செய்யப்பட்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## COP29 – பருவநிலை நிதி ஒப்பந்தம்

- வளர்ச்சியடைந்த நாடுகளால் பாகுவில் நடைபெற்ற COP29 கூட்டத்தில், 2035 ஆம் ஆண்டு முதல் ஆண்டிற்கு வெறும் 300 பில்லியன் டாலர்களை மட்டுமே திரட்டுவதற்கு உறுதியளிக்கும் வகையிலான ஓர் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.
- ஆனால் வளந்து வரும் நாடுகள் NCQG இலக்கினை ஒவ்வோர் ஆண்டும் 1.3 டிரில்லியன்

டாலர்களாக நிர்ணயிக்க வேண்டும் என்று கோரியுள்ளன.

- இந்த இலக்கு அல்லது புதிய கூட்டு அளவுரு சார்ந்த இலக்கு (NCQG) ஆனது, 2025 ஆம் ஆண்டில் காலாவதியாகவிருக்கும் தற்போதைய 100 பில்லியன் டாலர் நிதி திரட்டல் இலக்கிற்கு மாற்றாகும்.
- தற்போதைய வடிவத்திலான இந்த இலக்கு முன்மொழிவை இந்தியா ஏற்கவில்லை.
- 2009 ஆம் ஆண்டில், வளர்ச்சியடைந்த நாடுகள் 2020 ஆம் ஆண்டு முதல் ஆண்டிற்கு 100 பில்லியன் டாலர்களை திரட்ட முன் வந்தன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## THE இதழின் பல்துறை அறிவியல் தரவரிசை 2025




| Rank | University | Country/region |
|---|---|---|
| 1 | Massachusetts Institute of Technology | United States |
| 2 | Stanford University | United States |
| 3 | National University of Singapore | Singapore |
| 4 | California Institute of Technology | United States |
| 5 | Duke University | United States |
| 6 | University of Minnesota | United States |
| 7 | Wageningen University & Research | Netherlands |
| 8 | University of California, Santa Barbara | United States |
| 9 | Nanyang Technological University, Singapore | Singapore |
| 10 | University of Michigan-Ann Arbor | United States |

- சுமார் 65 என்ற அளவில் பல்கலைக்கழகங்களைக் கொண்டு, இந்தத் தரவரிசையில் அதிக எண்ணிக்கையிலான பல்கலைக் கழகங்கள் பிரதிநிதித்துவம் பெற்ற நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- அண்ணா பல்கலைக்கழகம் ஆனது, இந்தியக் கல்வி நிறுவனங்களில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்று, உலக அளவில் 42வது இடத்தைப் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து VIT பல்கலைக்கழகம் ஆனது 65வது இடத்தையும், SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆனது 84வது இடத்தையும் பெற்றுள்ளன.

- இதன் முதல் 10 இடங்களில் உள்ள இடம் பெற்ற ஒரே ஆசிய நாடாக சிங்கப்பூர் நாடு தனித்துவம் பெற்றுள்ளது.
- இந்தத் தரவரிசையில், 47 பல்கலைக்கழகங்களுடன் முதல் 100 இடங்களுக்குள் அதிகப் பிரதிநிதித்துவம் பெற்ற கண்டமாக ஆசியா உள்ளது.
- அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது இந்தத் தர வரிசையில் முதலிடம் பிடித்தது.
- இதில் அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூரின் தேசியப் பல்கலைக்கழகம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

# முக்கிய தினங்கள்

## உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினம் - நவம்பர் 24

- இந்த ஆண்டு முதல் முறையாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இது ஒட்டிப் பிறந்த இரட்டையர்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வது, அவர்களின் நல்வாழ்வை ஆதரிப்பது மற்றும் அவர்களின் சமூக உள்ளடக்கத்தை (சமூக இணக்கம்) மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 50,000 பிறப்புகளில் 1 ஆக மதிப்பிடப்பட்ட ஒட்டிப் பிறக்கும் இரட்டையர்கள் பிறப்பு ஆனது ஓர் அரிய பிறப்பு நிலையாகும்.




## உலகப் பாரம்பரிய வாரம் 2024 - நவம்பர் 19/25




- உலகின் பல்வேறு பகுதிகளின் மரபுகள் மற்றும் கலாச்சாரங்கள் பற்றிய ஒரு விழிப்பு உணர்வை பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தியத் தொல்லியல் துறையானது (ASI), நாடு முழுவதும் உள்ள சுமார் 3,650 பழங்கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்களைப் பாதுகாத்து வருகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Discover and Experience Diversity" என்பதாகும்.

## விமானப் பாதுகாப்பு விழிப்புணர்வு வாரம் - நவம்பர் 25/29

- விமானத்தின் அனைத்து அம்சங்களிலும் அதன் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தொழிற்துறையின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவின் முதல் பொது விமானப் போக்குவரத்து ஆனது, அலகாபாத் மற்றும் நைனிஆகியவற்றுக்கு இடையே முதல் வணிக ரீதியிலான விமானச் சேவையுடன் 1911 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- 1932 ஆம் ஆண்டில் டாடா ஏர்லைன்ஸ் சேவை தொடங்கப்பட்டது என்பது இந்தியாவில் திட்டமிடப்பட்ட விமானச் சேவைகளின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- இந்தியாவானது 1947 ஆம் ஆண்டில் சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பில் (ICAO) இணைந்தது.
- இன்று, இந்தியா உலகளவில் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானச் சந்தையாகத் திகழ்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★